TAMIL CATHOLIC ASSOCIATION OF VICTORIA, AUSTRALIA
விக்டோரியா தமிழ் கத்தோலிக்க சங்கம், ஆஸ்திரேலியா

TCAV

# Messenger
# தூதுவன்

கோடை வெளியீடு
October 2014




## தீவிரவாதத்தின் கோரபிடியில் கிறிஸ்தவம் !

# RED AUTO SERVICES

UNDER NEW MANAGEMENT

**Call Now 03 95482160**

No job too big or too small



## Our endeavour is Achieving better customer service

**Works undertaken**
- Fabrication & welding works
- Car wash & vacuuming

**OIL & OIL FILTER
CAR WASH
VACUUMING
PERFUMING
TYRE SHINING
$99**

Walking distance from Westall Railway Station.
13 Bando Road, Springvale, VIC-3171

For any of your service concerns Contact now :

**Prabhu Daniel**
**(0403 692 129)**

Special rates for our TAMIL community clients




## Open 7 Days
## 9am - 8pm

355-359, LONSDALE ST,
DANDENONG,
VICTORIA-3175, AUSTRALIA
TEL : (03) 9793 6888
FAX : (03) 9793 6866
EMAIL : devigovi@gmail.com
cjspices@gmail.com
BABU GOVINDARAJ
DEVIKA GOVINDARAJ

# TAMIL CATHOLIC ASSOCIATION of VICTORIA

## Management Committee

## 2014 - 2015



Rev. Fr. **Anthony Gnanaprakasam** - Chaplain



**Nirmala Alphonse**
President



**Eladious Fernando**
Vice President



**Reynald Alfred**
Treasurer



**Navin Fernando**
Secretary



**Radishkanthan**
Asst. Secretary

**John Pillai Priyaan**
Asst. Treasurer



**Shanthi Antony**
Welfare Secretary - North



**J. Thayanujan**
Welfare Secretary - South



**Wiliam Rajendran**
Religious Secretary - North



**Lucas Savariyar**
Religious Secretary - South



**Antony Francis**
Editor



**James Anandarajan**
Committee Member # 1

**Moses Lourdhunathan**
Committee Member # 2



**Cornelius Sebastiampillai**
Committee Member # 3



**Emilianus Chandrakumar**
Committee Member # 4



**Kamilas Soosaipillai**
Youth Co Ordinator




TCAV வலைதளம் அருமையாக உள்ளது. ஆனால், அடிக்கடி புதுப்பிக்கப்பட்டால், நல்லது. செய்வீர்களா?

**அமிர்தம் - Vermont south**

TCAVயின் AGM மற்றும் தலைவர் தேர்ந்தெடுத்தல் மிக சிறப்பாக அமைந்தது. முதன் முதலாக ஒரு பெண்மணி தலைமைப் பொறுப்பில் அமர்ந்தது, எங்கள் TCAVயின் உயிரோட்டத்தையே காண்பிக்கின்றது. மிக்க மகிழ்ச்சி !

**- Fernando - E, Hoppers Crossing**

2ம் மற்றும் 3ம் ஞாயிறு திருப்பலிகளில் கத்தோலிக்க தமிழ் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது மிக மகிழ்ச்சியாக உள்ளது. அது தவிர்த்து, ஒன்று கூடலில் திருப்பலி சிறப்பிப்பவர்கள் சிற்றுண்டி வகையறாக்கள் தருவது பாராட்டுக்குரியது. நன்றி !

**வில்லியம் - Springvale**

வேளாங்கண்ணி மாதா திருவிழா மிக பிரம்மாண்டமாக நடைபெற்றது. நமது TCAVயின் விழாக்களும் எப்போது களைகட்டும்?

**ராஜன் - Carrum Downs**

மிகச்சிறப்பாக நடந்த மடுமாதா திருவிழா பூசைக்கும், அதைத் தொடர்ந்து நடந்த உபகாரங்களில் வாய்க்கு ருசியான பலகாரங்களை அளித்தும் அசத்தி விட்டீர்கள். TCAV குழுவினரே. நன்றி ! சாப்பிடும் இடத்தை விரிவாக்க வாய்ப்பு ஏதும் உண்டா?

**பிள்ளை - Dandenong**

தூதுவன் இதழின் அச்சுக்கோர்ப்பு மற்றும் Presentation எல்லாம் சிறப்பாக உள்ளன. மேலும் பலரும் தங்கள் கருத்துக்களை பதிவு செய்ய முன் வரலாம்.

**Xavier, Hampton Park**



## நாங்கள் நற்செய்தியை அறிவிப்பதற்கான வாய்ப்பைக் கடவுள் உருவாக்கித் தருமாறு அவரிடம் எங்களுக்காகவும் வேண்டுங்கள். கொலோசியர்-4:3

அன்பின் சகோதரமே !

விக்டோரிய கத்தோலிக்க தமிழ் சங்கத்தின் தலைவியாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். எல்லாம் வல்ல இறைவன் அருளாலும், ஞானகுரு அந்தோணி ஞானப்பிரகாசம் அவர்களின் வழிநடத்துதலில், சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்களின் ஒத்துழைப்பிலும், உங்கள் அனைவருடைய பேராதரவிலும் சங்கத்தை முன்னேற்றப் பாதையில் வழிநடத்திச் செல்லமுடியும் என்ற நல்லதொரு எதிர்நோக்கு எனக்கு இருக்கின்றது.

இந்த ஆண்டின் நோக்கங்களாக பின்வரும் செயல்களை சங்கம் கருத்தில் கொண்டுள்ளது.

- ★ சங்கத்தின் வழக்கத்தில் உள்ள செயல்களைத் தொடர்ந்து திறம்பட செயல்படுத்துதல்.
- ★ வருடாந்திர தியானத்திற்கான சமூகந்தருதலை ஊக்குவித்தல்.
- ★ சங்கத்தின் செயல்பாடுகளில் இளைஞர்களை ஈடுபடுத்துதல்
- ★ சங்கத்தின் இணையதளத்தைச் செம்மைப்படுத்துதல்.
- ★ Bandoora-Dandenong இரண்டு பகுதிகள் இணைந்த செயல் திட்டங்கள்.
- ★ சங்க உறுப்பினர்களின் தொடர்பு விவரங்களை சரிப்பார்த்தல்.
- ★ சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து அதிகமான மக்கள் அறிய தருதல்.

இந்நோக்கங்களை செயல்படுத்த நிர்வாக உறுப்பினர்கள் தங்களை அணுகும் போது தங்களின் மேலான ஆதரவை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

மரம் செழித்து வளர்ந்து நல்ல கனி தர வேரானது நீரைத் தேடி மண்ணுக்குள்ளும், கிளைகள் ஒளியைத் தேடி மண்ணுக்கு வெளியிலும், பரந்து விரிந்து செல்கின்றன. நமது மண்ணில் நமக்கு கிடைக்காத எதையோ ஒன்றை தேடி தேடித்தான் நம்மை நாமே நம் மண்ணிலிருந்து வேரோடு பெயர்த்துக் கொண்டு வந்து இங்கே புதிய மண்ணில் வேரூன்றிக் கொண்டுள்ளோம்.

இந்தப் புதிய வேரூன்றலில் நமது மண்ணின் வாசம் மட்டும் வேரையோ, கிளைகளையோ. கிளை தரும் கனிகளையோ விட்டு நீங்காமல் இருக்க வேண்டுமென்பதே நம் ஒவ்வொருவரின் உள்ளத்தின் ஏக்கமாகவும் இருக்கின்றது.

நம்முடைய இந்த ஏக்கத்தை தணிக்கவே எமது சங்கம் செயல்பட்டு வருகின்றது. தமிழ் மணத்தோடு இறையரசைப் பரப்ப எமது சங்கம் மேற்கொள்ளும் சுயநலமற்ற தன்னார்வ பணிகள் வெற்றிப் பெற எல்லாம் வல்ல இறைவனிடம் எங்களுக்காக மன்றாடுங்கள்.



அன்புடன்
**நிர்மலா அல்போன்சு**

# Report of the Management Committee For the year Ending 30 June 2014

## நிர்வாகசபை வருட செயற்பாடுகள் அறிக்கை 30 ஆனி 2014 வரை

18-08-2013 - மடுமாதா திருவிழா - A combined service with Sinhala Catholics organised by TCAV

30-09-2013 - திருப்பலி மற்றும் திருவழிபாடு சடங்குகளுக்கான எடுத்துச் செல்லக்கூடிய ஆபரணப் பேழை - Portable Mass Wardrobe for Bundoora & Dandenong

30-11-2013 - பாவித்த மருத்துவ உபகரணங்கள் அன்பளிப்பு
Exporting used Medical Equipment to Holy Family Convent Hospital, Jaffna, Sri Lanka

08-12-2013 - வருடாந்திர நத்தார் விழா கொண்டாட்டங்களும், இரவு விருந்தும்
Annual Christmas Carnival & Dinner

01-01-2014 - புது வருட திருப்பலியும் - இணையத்தள திறப்பு விழாவும்
New Year 2014 Mass & Launching TCAV Website

25-01-2014 - 2 நாட்கள் 1 இரவு - BBQ & கோடைகால முகாம் மற்றும் முகாம் திறந்தவெளி திருப்பலி
2 Days 1 Night - BBQ & Summer Camp (25th & 26th January 2014) Nioka Bush Camp

16-01-2014 - போரினால் பாதிக்கப்பட்ட பின் தங்கிய வன்னி சிறார்களுக்கு பின்நேர வகுப்புகள் - Tution Centre in Vanni - For War Effected Villages & Student

23-02-2014 - இலங்கை மாத திருவிழா - "Feast of Our Lady of Lanka" - A Combined Service with Sinhala Catholics organised by ASLCA

30-03-2014 - வருடாந்திர ஞான ஒடுக்கம் - Annual Retreat

30-03-2014 - வேதாகம அறிவுப் போட்டி (முதியோர் - இளையோர் - சிறுவர்)
Bible Quiz Competition for Adults - Youth and Childrens

18-04-2014 - பெரிய வெள்ளி ஆராதனைகளும் - Good Friday Service

18-04-2014 - "கிறிஸ்துவின் பாடுகள்" சிறுவர் ஓவியப் போட்டி - "Passion of Christ" Kids Art Competition

23-06-2014 - TCAV சமூக நல திட்டங்களுக்கான புதிய வங்கி கணக்கு ஆரம்பிக்கப்பட்டது.
New Bank Account Opened for "TCAV Community Projects"

### State of Finance (Summary)

| TCAV Main Accounts | | |
|---|---|---|
| - Balance as at 30-06-2013 | | $ 11,693.67 |
| - Income (Membership, Advertisements, Donations....) | | $ 11,355.93 |
| **Total Income** | ** | $ 23,039.60 |
| **Less Expenses** | ** | $ 19,468.77 |
| **Total Funds Avilable (after adjustments)** | ** | $ 3,510.83 |

| TCAV Chaplain Fund | | |
|---|---|---|
| - Balance as at 30-06-2013 | | $ 5,057.97 |
| - Contributions & Collection | | $ 5,015.45 |
| Total Income | ** | $ 10,073.42 |
| Less Expenses | ** | $ 6,000.00 |
| Total Funds Avilable (after adjustments) | ** | $ 4,073.42 |

** Summary only, for more details, please refer audited AGM reports

### Financial Milestones and donations during this period

1. Vanni Tuition Project - We transferred 6 months worth of funds ($300 x 6) to Vanni Education Project. These funds were sponsored by our members. Or members have pledged to sponsor for 2 years.
2. We have pledged ???
3. ??????
4. ??????

**Eladious Fernando**
Presidents

**Navin Fernando**
Hon.Secretary

**Alfred. E. Reynald**
Treasurer

# The Tamil Catholic Association, Victoria

P.O.Box 481, Rosanna, Victoria 3084, Australia

A.B.N. 57 010 334 854 | Approved Charitable Organisation VCGLR 58755

Email – tcavinfo@gmail.com | Web Site – tcav.org.au


## TCAV 28TH AGM was held on 20TH July 2014

### Four-in-One combined Event, Celebrating

### Tamil Mass - Chaplian's Day – AGM – Lite Entertainment

At St Paschals Seminary, 100 Albion Road, Box Hill, Victoria

## AGM Summary Reports for 2013–2014



TCAV PLANS AND STRATEGIES FOR THE CURRENT TWO FISCAL PERIODS 2012-2014

TARGETED TO ACHIEVE | CHRISTMAS EDITION UPDATE | ACHIEVED OR WORK IN PROGRESS

All the below projects have been completed

Charitable Organisation
(work in progress about to be completed soon)
- Completion of ATO ... ATO Approval

Media and Public Relations and Communications
(work in progress about to be completed soon)
- Launching TCAV Website
- Newsletter Publication – Four Issues per year

TCAV Liturgy Programs

TCAV Tamil Affairs**
- Make our members aware that "Tamil Affairs" is part of our mission in addition to our primary missions "Worship, Fellowship, Friendship"
- Organising Dialogue with Tamil Diasporas, Sri Lankan and Australian Government officials

TCAV Community Help to Tamils**
(work in progress about to be completed soon)
- Training in Tamil Areas and/or Refugees in Sri Lanka or India

AGM and New Committee Matters
Charitable Organisation
- Complete ATO formalities next year

TCAV Silver Jubilee Event (Mass & Dinner)
- Bishop Thomas Sowundaranayagam, visited detention centres in Sydney and Melbourne meeting Tamil refugees.
- Bishop Thomas Sowundaranayagam also met Parliamentarians and Government ... Canberra and Melbourne ... part of Sri Lanka and request assistance and to consider economic development projects.

Media and Public Relations and Communications
- Release of Christmas Edition Newsletter
- Planning underway to launch our TCAV Website in the next quarter

TCAV Mini Raffle
- Sales and distribution

TCAV Ladies Auxiliary**
- Northern region already commenced and workshops are being conducted.
- Waiting to officially inaugurate TCAV Ladies Auxiliary Group once North and South is in operation.



1



Editorial

தலையங்கம்

# தீவிரவாதத்தின் கோரபிடியில் கிறிஸ்தவம் !

மத்திய கிழக்கில் இப்பொழுது நடக்கும் அகோரங்களுக்கும், அநியாயங்களுக்கும், எப்பொழுது விடிவு கிடைக்குமோ என்ற பதைபதைப்பு உலகளவில் வியாபித்துள்ளது. ISIL என்ற தீவிரவாத இயக்கம், அவர்களது வழியை கடைபிடிக்க ஒப்புக்கொள்ளாத அப்பாவி மக்களை மிக கொடூரமான முறையில் கொன்று வருகின்றார்கள். அவர்களுடைய குறிக்கு யாரும் தப்பவில்லை. கிறிஸ்தவர்கள், யாசிடி இன மக்கள், ஏன் அவர்களுடைய பிற மார்க்கத்தை சார்ந்த ஷியா இஸ்லாமியர்களை கூட அவர்கள் விட்டு வைக்கவில்லை.

2001ல் இந்தியாவில், குஜராத்தில் நடந்த மதக்கலவரத்தில் பலர் கொல்லப்பட்டதை பற்றி அலசின ஆய்வுக் கட்டுரையில் கொடுத்த காரணங்கள் இப்பொழுது எனக்கு நினைவுக்கு வருகின்றது. அக்கம்பக்கத்து வீடுகளில் சகோதரர் போல் பழகிய இந்து முஸ்லீம் மக்கள், இரத்த வெறி பிடித்தவர்களாய் மாறினார்கள் என்றால், முன்னே கூறிய அதே வார்த்தைகள் தான் - இரத்தத்தை பார்த்ததும் வெறியர்களாகி விடுகின்றனர். மனிதத் தன்மையை மறந்து மிருகங்களாகி விடுகின்றனர். எப்பொழுது அந்த இரத்த வெறி அடங்குகின்றதோ, அப்பொழுதுதான் அவர்களது கோரம் தணிந்து இயல்பு நிலைக்கு திரும்புகிறார்கள்.

இவ்வாறு ஈராக், சிரியாவில் கொடூரங்கள் நிகழ்ந்தவண்ணம் ஒருபுறமிருக்க, ஆப்பிரிக்காவில் Boko Haram என்ற பெயரில் அல்கொய்தாவின் மற்றுமொரு அங்கமான தீவிரவாத இயக்கம், கிறிஸ்தவர்கள் மேல் கொடூரத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளது. நைஜீரியாவில் கிறிஸ்தவ பள்ளியில் இறுதி தேர்வை எழுத வந்த 200 சிறுமிகள் 6 மாதங்களுக்கு முன் கடத்தி செல்லப்பட்டனர். வெறும் $12க்கு ஏலத்தில் விற்கப்பட்டதாகவும், மற்ற தீவிரவதிகளுக்கு தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டதாகவும், அனைவரும் கட்டாய மதமாற்றம் செய்யப்பட்டதாகவும், செய்திகள் வந்துள்ளன. கென்யா, சோமாலியா, கேமரூன் போன்ற நாடுகளிலும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வேதகலாபனை (Persecution) தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன.

இத்தருணத்தில், கிறிஸ்துவ கத்தோலிக்கர்களாகிய நாம் உச்சுக் கொட்டுவதையும், பச்சாதாபம் படுவதையும் தவிர வேறு என்ன செய்ய இயலும்? இவ்வளவு கிறிஸ்தவர்கள் கொல்லப்படுவதை எதிர்த்து, தாய் திருச்சபையின் நிலைபாடென்ன? 800 ஆண்டுகளுக்கு முன் கிறிஸ்தவர்களை நிர்மூலமாக்கிய துருக்கியர்களுக்கு எதிராக சிலுவை போர்களை

(Crusades) நடத்திய யுக்தியை கையாளலாமா? இல்லவே இல்லை. ஆஸ்திரேலியா உட்பட நேச நாடுகள், அமெரிக்காவின் தலைமையில், வான்வழியாக, வெடிகுண்டு தாக்குதல், பொருளாதார ரீதியாக முடக்குதல் போன்ற வழிமுறைகளை கையெடுத்திருப்பினும், பெரிதாக வெற்றி காண முடியாத நிலையில் உள்ளனர். ஆக இதற்கு என்னதான் வழி? நமது திருச்சபையின் வழிகாட்டுதலில் "ஜெபமே ஜெயம்" என்ற வழிதான் மிகச்சிறந்த வழி. எங்கோ நடக்கின்றது நமக்கென்ன என்றிராமல், விழிப்புணர்வுடன் இருப்போம் இடைவிடாமல் ஜெபிப்போம். இன்னல்களை களைந்து, புல்லுறுவிகளை வேரறுத்து, உலக சமன்பாட்டில் மீண்டு செல்ல இறைவனிடம் எத்தணிப்போம். இப்பொழுது உடைமைகளையும், உறவுகளையும் துறந்து, உயிரை பணயம் வைத்து இன்னமும் கிறிஸ்துவில் தளராத விசுவாசமுள்ள சிரியா, ஈராக், நைஜீரியாவின் கிறிஸ்தவர்கள் மென்மேலும் தமது விசுவாசத்தில் ஊக்கமடைய அவர்களுக்காக உருக்கமாக மன்றாடுவோம். இல்லையெனில், எங்கோ நடக்கும் தீவிரவாதம் நம்மை என்ன செய்யப் போகின்றது என்று அலட்சியமாக நாமிருந்தால், மத்திய கிழக்கிலிருந்த வந்த தாக்கம் எப்படி மெல்பர்னில் என்டேவர் ஹில்ஸிலிருந்தவர்களை, மூளை சலவை செய்யப்பட்ட இளைஞன் மூலம் பிரதிபலித்ததோ, அதே போல் நாம் வாழும் இடமருகேவும் அரங்கேறும். ஆக ஜெபிப்போம்... இடையறாது !

கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி உண்மையான விசுவாசத்திற்கு அளப்பெரிய சாட்சி- புனித உயிர்த்துறவு !

அன்புடன்,
அந்தோனி பிரான்சிஸ்
(பதிப்பாசிரியர்)



# Boko Haram

- Means "Western Education is Forbidden"
- Due to their atrocities 650,000 people have fled Nigeria, Cameroon, Niger and Chad
- Has killed more than 5000 civilians (2009-2014)
- Training and funds from Al Qaeda
- Strength few thousands

# ISIL (ISIS) committing staggering crimes in Iraq and Syria

- Started in 1999 -Name changed from Al Qaeda Iraq to ISIL in 2006 - expanded into Syria in 2013
- 170,000 Christians expelled from North Iraq (their generations have been living there for around 2000 years)
- 500,000 have fled the conflict zone in Syria
- Over 10,000 Christians have been killed
- 17.386 have been (officially) injured

## Why everyone says it will take years to wipe out ISIS?

- First terrorist organisation to have over 2 Billion dollar cash ($450 millions were alone looted from Central Bank of Mosul)
- 80,000-100,000 militants fighting with them
- $3 million revenue daily from oil and gas alone
- Both groups are Sunni Militants

# ஆண்டவரின் உன்னத அன்பு



உலகின் தலைச்சிறந்த கேள்விகளில் ஒன்று "ஏன் படைப்பு உருவாயிற்று? ஏன் ஒன்றுமில்லாத நிலையிலேயே இருந்திருக்கலாமே !"

நன்மை தானாக பரவும் தன்மை கொண்டது. (Good is diffusive itself) பரந்து விரியும் மகத்துவம் கொண்டது. கடவுள் தன்னுடைய பெருமிகுதியான அளவில்லா நன்மையாலும், அன்பினாலும் இந்த பிரபஞ்சத்தை படைத்தார். அதில் தன்னுடைய எல்லையில்லாத முடிவில்லா மகிமையை பகிர்ந்துக் கொண்டார். அவருடைய அன்பினால் நம்மையும் உருவாக்கினார். தன்னுடைய சாயலிலேயே நம்மை உருவாக்கினார். ஆதலால் அவரைபோலவே நம்மையும் கண்ணியத்துடனும், மனவிருப்பத்துடனும் (Free Will) படைத்தார். அந்த மனவிருப்பத்தை (Free Will) நாம் தவறாக பயன்படுத்தி கொண்டு பாவத்தால் கடவுளை பிரிய நேர்ந்தாலும் அவர் நம்மை அழிக்கவில்லை, ஒதுக்கவில்லை, பழைய ஒன்றுமில்லாத நிலைக்கு நம்மை மாய்க்கவுமில்லை. மாறாக, வேற்றுமை நீங்கி மீண்டும் அவரிடம் திரும்பி வர நமக்கு உருவாக்கி தந்த வாய்ப்பு, உலகத்தை படைத்த பொழுதுள்ள மாட்சிமையை காட்டிலும், மிகுதியானது.

ரோமர் - 4:25 "நமது பாவங்களுக்காக இயேசு மரணத்திற்கு ஒப்படைக்கப்பட்டார். நம்மை நீதிமான்களாக்க அவர் மரணத்திலிருந்து எழுப்பப்பட்டார்."

2 கொரி 5:21 "கிறிஸ்துவிடம் பாவம் இல்லை. ஆனால் தேவன் நமக்காக அவரைப் பாவம் ஆக்கினார். நாம் கிறிஸ்துவுக்குள் தேவனுக்கு ஏற்றவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காக தேவன் இதை செய்தார்"

நாம் ஒவ்வொருவரும் நம்முடைய பாவத்தால் சிறைப்பட்ட போதிலும் அவர் நம்மை அன்பு செய்கிறார். "பாவம்" அதனுடைய கொடூர குணத்தால் (வேற்றுமை, சுயநலம், இச்சை, பேராசை, இறுமாப்பு, பெருமை போன்று அருவருக்கும் குணத்தால்) நம்மை ஆட்டிவைத்து கடவுளுக்கும், நமக்கும் உள்ள இடைவெளியை அதிகமாக்கினாலும், அவர் நம்மை அதே அதிக அளவில் நேசிக்கிறார்.

ரோமர் - 5:8 "ஆனால் நாம் பாவிகளாக இருக்கும்போதே நமக்காக கிறிஸ்து உயிரை விட்டார். இதன்மூலம் தேவன் நம்மீது கொண்ட பேரன்பை நிரூபித்துவிட்டார்"

மனிதன் தன்னுடைய பகுத்தறியும் சிந்தனையால் உந்தப்பட்டு, தான் கடவுளை நேசிக்கிறோம் என்று நம்புகிறான். ஆனால் அதற்கும் முதன்மையாக கடவுள் தான் மனிதனை முதலில் நேசிக்கிறார் என்பதே உண்மையாகும். கடவுள் நம்மை முதலில் நேசிப்பதினால்தான் நாம் கடவுளை நேசிக்கிறோம் என்பதை

உணரமுடிகிறது.

யோவான் - 3:16 "ஆம் ! தேவன் இவ்வுலகினைப் பெரிதும் நேசித்தார். எனவே தனது ஒரே குமாரனை இதற்குத் தந்தார். தேவன் தன் மகனை தந்ததால் அவரில் நம்பிக்கை வைக்கிற எவரும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை பெறுவர்"

யோவான் - 3 : 1 "பிதா நம்மை மிகவும் நேசித்தார். நாம் தேவனின் பிள்ளைகள் என்று அழைக்கப்படுகிறோம். ஆனால், உலகத்தின் மக்களோ நாம் தேவனின் பிள்ளைகள் என்பதை புரிந்து கொள்வதில்லை. அதற்குக் காரணம் தேவனை அவர்கள் அறியாமல் இருப்பது ஆகும்.'' திருவிவிலியத்தில் நிறைய கேள்விகள் உள்ளது. அதன் எல்லாவற்றிற்கும் பதில் ஒன்று; அதுதான் "கடவுளின் அன்பு"

ஏன் பிரபஞ்சம் உருவானது? ஏன் அவதாரம் ஏன் இரட்சிப்பு எல்லாாவற்றிற்கும் ஒரே பதில் கடவுள் நம் மீது வைத்திருக்கும் அளவுக்கடந்த அன்பு. திருவிவிலியத்தில் பல இடங்களில் கூறப்பட்டிருக்கும் கடவுளின் சினம் கூட கடவுள் நம் மீது வைத்திருக்கும் அளவில்லாத அன்பின் வெளிப்பாடுதான்.

திருவிவிலியத்தின் மொத்த வார்த்தையையும், ஒத்த வார்த்தையாகவும் ஒரே குரலாகவும் மாற்றினோமென்றால், அது கடலின் ஆர்ப்பரிக்கும் மொத்த அலைகளின் சத்தமாக "கடவுள் நம்மை நேசிக்கிறார்" என்று கர்ஜிக்கும்.

ஆம் அன்பார்ந்த நண்பர்களே ! நாம் கடவுளின் சிறந்த படைப்பு மட்டுமல்லாமல், இப்படிப்பட்ட மிகச்சிறந்த ஆண்டவரின் அன்பையும் பெற்றிருக்கிறோம். அதனை உணர்ந்து நமக்குள் உள்ள வேற்றுமை நீங்கி ஒருவருக்கொருவர் அன்பு செய்வோமாக, அதுவே ஆண்டவரிடம் மீண்டும் இணையும் பாலமாக அமையும்.



கடவுளின் அன்பை சுவாசிக்கும் **அமல்ராஜ்**



# Tips for Toppers



Hello Everyone,

Hope you're all having a wonderful time at school. Its great to talk to all of you through this magazine. I thought of sharing some of the challenges faced in high school, As many of you will agree with me.

As a high-school student, sometimes it's stressful to cope up with the transition from primary to secondary schooling. I know that most of us struggle with tests/exams and so I have a few tips to share. The best way to get high grades in exams is to consider the entire length of the course as a pre-exam, preparation period. Because different subjects can last a whole year and we may find it difficult to make a balance between our daily homework, periodic assignments, and our final exam.

To get high marks, let's start by recognizing that all academic work done throughout the school year is for the benefit of the final exams at the end of the year. So by identifying this, we can prepare our minds to be convinced that all knowledge and strategies gained throughout the year is actually a revision for the exam.

Also-sleep well, eat well and drink plenty of water, as being hydrated is the key for concentration. Also we should never give up and most importantly as Christians remember to pray to God to help us, that through faith we can achieve anything. Because Philippians 4:13 says : I can do all things through Jesus Christ who strengthens me and empowers me.

So let's start believing now and see our success.

**By, Immanuel Amalraj**
Year 8 Waverley Christian College, Narre Warren

# CRESTON ®
## REAL ESTATE

Change dreams into reality



# Thinking of Selling?

**Would you like : A Free Market Appraisal?**
**A Second Opinion?**
**Sales Advice?**

**Call Ashton Ashokkumar NOW! 0405 559 766**




Dandenong Central | Metro Village, Dandenong | Dandenong North | Dandenong North

www.crestonrealestate.com.au PH : 03 9792 0042
264 Lonsdale St, Dandenong - 3175



# Anton's Driving School

FOR SAFE AND EFFICIANT DRIVING

L P P

***Anton Thavarajah***
***Bhavani Thavarajah***
Professional Driving Instructors
Over 18 Years Experience

* Professional Instructors
* Late Model Cars (Automatic)
* Discount for Students
* 1 Hour free Lesson

0402947240
0403564149

*With Best Compliments from*

# JAMES STREET
## MEDICAL CENTRE
## BULK BILING

**Dr. Anne Sellathurai** M.B.B.S., F.R.A.C.G.P.

11/63 James Street Dandenong VIC 3175 Ph : 03 9793 1962 / Fax : 03 9793 1924
jsmc_anne@hotmail.com

MULTI-LINE
CARGO & TRAVELS

**WE FREIGHT TO ANYWHERE IN THE WORLD !**

**SEND SOMETHING SPECIAL TO YOUR LOVED ONES THIS SEASON.**

**WE DELIVER TO ANY PART OF THE COUNTRY**

240/21, PLENTRY ROAD,
BUNDOORA
VICTRORIA 3083
AUSTRALIA

SEBASTIANSYLVESTER
PH : (03) 9467 1400
FAX : (03) 9467 1500
MOB : 0431 641 275

ABN: 44 665 521 225
P.O. BOX 339, THOMASTOWN, VICTORIA 3074 AUSTRALIA. P : (03) 9467 1400 F : (03) 9467 1500 W : www.multi-line.com.au

AFFORDABLE & RELIABLE



# OBEDIENCE

Obedience is listening to elders like parents, God and Jesus. Obey is short for obedient. It is like when you do something what parents want you to do is showing obedience.

There are 10 things to show your people Obedience :

- Help your parents if they are sick
- Don't argue
- Listen to them if they are teaching you something
- Don't lie to them
- Do what your parents ask you
- Pray to God if your parents ask you
- Don't make a fuss
- Be Honest
- RESPECT Teachers, sibling, parents and God
- Speak Nicely

**By : Mark Sesuraj,**
Yr. 3 St Roch's Primary, Glen Iris



# அச்சான முதல் நூல் !

முதல் தமிழ்ப் புத்தகம் 1554ஆம் ஆண்டு பிப்ரவரி 11ம் நாள் போர்ச்சுக்கீசிய நாட்டின் தலைநகரான லிஸ்பனில் வெளியானது. அதை ஆக்கியோர் வின்சென்ட் தெ நாசரெத், ஹோர்கே கார்வாலோ மற்றும் தோமா த குருசு எனும் மூவர் அவர்கள் தமிழ் அறிந்த இந்தியர்களாகத் தான் இருக்க வேண்டும். அவர்களுடைய கிறிஸ்தவப் பெயர்களைத் தவிர மற்ற விவரங்கள் நமக்குத் தெரியவில்லை. இவர்கள் தூத்துக்குடி பரவர்கள் குலத்தைச் சார்ந்தவர்கள். (இன்றைய Fernandos)

கார்த்தீயா ஏங் லிங்குவா தமுல் எ போர்த்துகேஸ் (Cartilhalingoa Tamul e Portugues) "தமிழ் மொழியிலும், போர்த்துகீசியிலும் அமைந்த (திருமறைச்) சிற்றேடு" என்னும் தலைப்பில் அந்த நூல் வெளியானது. அந்த நூலில் தமிழ்சொற்கள் லத்தீன் எழுத்துக்களில் அச்சுக் கோர்க்கப்பட்டிருந்தன. இந்த நூல்தான் வரலாற்றிலேயே முதலில் அச்சேற்றப்பட்ட தமிழ் நூல்; இந்திய மொழியொன்றிலிருந்து ஐரோப்பிய மொழிக்கு எழுத்து மாற்றம் செய்யப்பட்ட முதல் நூல் என்று செக்கோஸ்லேவேகியாவின் தமிழ் அறிஞர் கமில் சுவெலபில் குறிப்பிடுகிறார்.

## அச்சில் மூத்தது

மதுரை போன்ற இடங்களில் செப்புப் பட்டயங்களிலும், கல்வெட்டுகளிலும் எழுதப்பட்டு வந்த காலக்கட்டத்திலேயே இந்தத் தமிழ் அச்சு வெளியீடு நிகழ்ந்தது. தமிழில் முதலாவதாக அச்சேறிய இந்தப் புத்தகம் ரஷியா (1563), ஆப்பிரிக்கா (1624), கிரீஸ் (1821) நாடுகளில் முதன்முதலாக அச்சிட்ட நூல்களின் காலத்தைவிட முந்தையதாக இருக்கிறது.

# தந்தையின் தன்னார்வம்




காலை ஆறரை மணி ஆள் அதிகமில்லாத தெரு. நடைப்பாதையின் அருகே ஓர் உருவம். முதுகில் பாரமான பை, இடது கையில் ஓர் கூடை, அதில் தண்ணீர் பாட்டில், டிபன் பாக்ஸ். அவனது உடை பள்ளியின் சீருடை எனக் காட்டியது. பச்சை கால் சட்டை, மஞ்சள் நிற மேல் சட்டை. அந்த உருவம் யாருமில்லை. பள்ளி மாணவன் பேருந்துக்காக காத்துக் கொண்டிருந்தான்.

அவ்வழியே ஒரு வயதானவர் நடைபயிற்சி செய்து கொண்டு வந்தார். அவர் அந்தப் பையனை அதிர்ச்சியுடன் ஆர்வமாக பார்த்தார்.

"என்னப்பா? இங்கு ஏன் நின்றுக் கொண்டிருக்கிறாய்?" என்றார்.

அதற்கு அந்தப் பையன் "ஸ்கூல் பேருந்திற்காக காத்துக் கொண்டிருக்கிறேன் என்றான்." "இங்கு பஸ் வராதே. அதோ அந்த தெரு முனையில் தான் ஸ்கூல் பஸ் வரும். நீ தவறாக இங்கு நிற்கிறாய்." "இல்லை இங்கு வரும் செயிண்ட் மிக்கேல் பள்ளி மாணவன் மாதிரி தெரிகிறது. அங்கே போ"

"இல்லை இங்கு வரும் தாத்தா. அதோ பாருங்க பஸ் வந்துவிட்டது." திரும்பி பார்த்தார் அந்த வயதானவர். அங்கு பஸ் வந்து நின்றது. அந்தப் பையன் பெரியவரை நோக்கி

"நான் சொன்னேனே பஸ் வரும் என்று" என சொல்லிக் கொண்டே பஸ்ஸில் ஏறியவன். "தாத்தா பார்த்தாயா. இந்த பஸ் டிரைவர் யாரு தெரியுமா? என் அப்பா மை டாடி" என்றான்.

பஸ் நகர்ந்தது. பெரியவர் தனது நடையைத் தொடர்ந்தார்.

தன் மகன் மீது நேசம் கொண்ட அந்த அன்பான தந்தை யார்? சற்று சிந்திப்போம்... இறைவன். இறைவன் நம்மீது அன்பு கொண்டு தனது அன்பான மகனை நமது மீட்புக்காக அனுப்பினார். மகன் தந்தையின் மீதும், தந்தை தனது அன்பான மகன் மீதும் அன்பு கொண்டனர். அதேபோல் நாமும் நமது இறைவன் மீது அன்பு கொள்ள வேண்டும்.

இறைவன் மீது நாம் செலுத்தும் அன்பு நேரிடையாக அமைய வேண்டும். அதனால் நாம் அன்பு கொள்ள வேண்டியவர்கள் நம்மை சுற்றியுள்ள மனிதர்களே அன்பே இறைவன், இறைவனே அன்பு "இறைவன் தன் உருவில் மானிடரைப் படைத்தார். கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார். ஆணும், பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். (தொ.நூ. 1:27)" ஆகவே இறைவன் உருவில் இருக்கும் நமது சுற்றத்தை நேசிப்பது நமது இறைவனை நேசிப்பதற்கு சமமாகும். அதனை நடைமுறைப் படுத்தி இறைவனின் நேசத்தை உணர்வோம்.



அனுப்புநர்,
A.J.S. ராஜன்
நுங்கம்பாக்கம்,
சென்னை - 600 034.

# இது நீதியாகுமா?

– நிர்மலா அல்போன்சு

தூதுவனில் உண்மையா அது என்ன? மற்றும் காலடி அமர்ந்து என்ற சிந்தனைகளைத் தொடர்ந்து, இந்த இதழில் உங்களை எவ்வாறு சந்திக்கலாம் என்று சிந்தித்துக் கொண்டிருந்த வேளையில்,

"Is Justice Enough? Aquinas on Justice and Love" என்ற தலைப்பில், ஆஸ்திரேலியா கத்தோலிக்கப் பல்கலைக்கழகத்தில் நடைப்பெற்ற ஒரு சொற்பொழிவில் கலந்துக் கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.

நிகழ்வு ஆரம்பிக்கும் முன்னதாக நான் கண்டு வியந்தது சொற்பொழிவு ஆற்றுபவரும், அமைப்பாளர்களும், குறிப்பிட்ட நேரத்திற்கு 30 நிமிடங்கள் முன்னதாக அரங்கிலிருந்தார்கள். பார்வையாளர்கள் ஒவ்வொருவராக அனைவரும் 5 நிமிடங்கள் முன்னதாக இருக்கையில் வந்து அமர சரியாக 6 மணிக்கு நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. சொற்பொழிவு நடைப்பெற்ற ஒரு மணி நேரமளவும், அரங்கில் ஊசி விழுந்தால் ஓசைக் கேட்குமளவிற்கு அமைதி நிலவியது. நான் கூட நினைத்தேன், இவர்கள் கவனிக்கிறார்களா? அல்லது தூங்கிப் போய் விட்டார்களா? என்று. ஆனால் கேள்வி பதில் நேரத்தில் ஒவ்வொருவரும் கேட்டக் கேள்வியின் ஆழத்திலிருந்து, எத்துணை அருமையாக கவனித்திருக்கிறார்கள் என்று அறிந்தேன்.

இதுப்போன்ற பாங்கான அமைப்பு, நம்மவர் கூட்டங்களில் எப்பொழுது சாத்யமாகும்? என்ற ஏக்கம் பெருமூச்சாக வெளியேறி விண்ணெழுந்துச் சென்றது. (வாசிக்க - விவிலியம் உரோமையர் 8:26)

சொற்பொழிவின் அமைப்பை கண்டே மனம் வியந்து நிற்கையில், சொற்பொழிவு கருத்தின் ஆழம் எனக்குள் ஏற்படுத்திய தாக்கத்தையே "இது நீதியாகுமா?" என்ற தலைப்பில் உங்களோடுப் பகிர்ந்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தத்துவமேதையும், இறையியலாலருமாகிய புனித தாமஸ் அக்வினாஸ் "நீதி என்பது என்ன?" நீதியின் பல பிரிவுகளாக என்ன சொல்லியிருக்கிறார் என்பதை சொற்பொழிவாளர் பல உதாரணங்களோடு விளக்கிக் கூறினார். சொற்பொழிவின் மையப் பொருளான பின்வரும் கருத்தை உள் வாங்கிக் கொண்டு அரங்கிலிருந்து வெளியேறினேன்.



"நீதி என்பது ஒரு பண்பு" ஒரு மனிதன் உலகில் வாழ்வதற்கு அடிப்படைத் தேவைகளாகிய உணவு, உடை, இருப்பிடம் - இவை உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் போய்ச் சேர வேண்டும் என்று மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் நினைக்க வேண்டும் என்பதே அந்தப் பண்பாக இருக்க வேண்டும்.

சொற்பொழிவின் இந்த மையப் பொருளும், உலகில் ஒரு மனிதன் உடுக்க உடையில்லாமலும் உண்ண உணவின்றியும் தவிக்கும் போது, வேறொரு மனிதன் ஒரு உடைக்கேப் பல ஆயிரங்கள் செலவு செய்வதும், வீணாக உணவுப் பொருட்களை குப்பையில் எறிவதும் நீதியாகுமா? என விடுக்கப்பட்டக் கேள்வியும் மனதை உறுத்திக் கொண்டு இருக்கின்றது.

கேள்வியின் பதிலாக, இது நீதியில்லை தான் என்று புத்தி தெளிவாகச் சொல்கிறது. அப்படியானால், இதற்கு மனம் காணும் தீர்வு என்ன? வீணான ஆடம்பரங்களுக்கு செலவு செய்வதை நிறுத்தி, நமது தேவைகளைக் குறைத்துக் கொண்டு சேமிப்பை எளியோருக்குப் பயன்படுத்தலாம் என்பது சரியான தீர்வாக இருக்குமா?

அடுத்த முறை கடைக்குச் சென்று நமக்கென ஒரு புடவையோ, சட்டையோ வாங்க நினைக்கும் போது, இது எனக்கு இப்பொழுது அவசியம் தேவையா? இதை

வாங்கினால் எத்தனைமுறை இதைப் பயன்படுத்துவேன்? என்று உள்மனம் நம்மை எச்சரிக்குமா?

நம்முடைய ஒவ்வொரு செயலும், வாழ்க்கை முறையும் உலகில் வாழும் பிற மனிதனுடன் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ தொடர்புடையதாக இருக்கின்றது. எனவே, நம்முடைய எளிய வாழ்க்கை முறை, தேவைக் குறைப்புத் தீர்வு எங்கோ வாழும் ஒரு ஏழையின் துயர் துடைக்கும் என்பதை உறுதியாக நம்பலாம்.

நமது திருத்தந்தை Francis அவர்கள் ஏழைகளுக்கும், பசித்தோருக்கும் உதவுங்கள் என்று பல இடங்களில் பலக் கூட்டங்களிலும் வலியுறுத்தி வருகிறார். அவர் சொல்கிறார். ஒவ்வொரு மனிதனும் உயிர் வாழ்வதற்கான அடிப்படைப் பொருட்கள் போதுமான அளவு உலகில் இருக்கின்றது. அப்படியாகத்தான் இறைவன் இந்த உலகைப் படைத்தும் இருக்கின்றார். இந்த அடிப்படைத் தேவைகள் எளியோரைப் போய்ச் சேர. போர்க்கால அடிப்படையில் வேலைச் செய்ய நம்மை அழைக்கின்றார். அவர் நமக்கு விடுக்கும் அழைப்பின் வாயிலாக, எனது இந்தப் பகிர்வை நிறைவுச் செய்கிறேன்.

"Therefore dear brothers & sisters, I invite you to make space in your heart for this emergency of respecting the God - given rights of everyone to have access to the basic needs. I invite all of the Institutions of the world, the church each of us, as one single human family, to give a voice to all of those who suffer silently from hunger, so that this voice becomes a roar, which can shake the world."

- Pope Francis



# TCAV பொருளாளரின் மடல் . . .

*Dear TCAV Members and Friends,*

**தயவுசெய்து உங்கள் TCAV வருட அங்கத்துவ மற்றும் ஆன்ம குரு பராமரிப்பு சந்தாக்களை நிலுவைகள் இல்லாமல் உடனடியாக செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்.**

| | |
|---|---|
| Annual membership $40 ($20 Concession) | Chaplain Maintenance $60 (or $5 / Month) |

This is a kind reminder to you about the Tamil Catholic Association of Victoria's Membership free and Chaplain Maintenance Fund for the financial year 2014/2014. As we are in the middle of the financial year please be kind enough to pay your Membership and Chaplain Maintenance Fund Fees as early as possible. Some of you have paid membership fee only and please pay Chaplain Maintenance Fund Fee also if possible.

**For Membership Fee Deposits :**
Name of Account Holder -
"Tamil Cathiloc Association of Victoria"
Bank, State & Branch (BSB) No. - 06 3245
Account Number : 10031975

**For Chaplain Maintenance Fund Deposits :**
Name of Account Holder -
"Tamil Cathdic Association of Victoria - Chaplain's Fund"
Bank, State & Branch (BSB) No. 06 3245
Account Number : 10512920

**Please contact me on (03) 9795 7798 (AH) or 0439 302 597 if you need further information.**

THANK YOU ! GOD BLESS !

*Yours Sincerely : Alfred Reynald*




Our Lady of Lanka 23 Feb Bacchus Marsh



Lenten Retreat by Fr. Amal 30 Mar 2014 Box Hill



Youth Animation 30 Mar 2014 Box Hill



Palm Sunday 30 Apr St. Gerards, Dandenong



Good Friday Box Hill 18 Apr 2014



Mothers Day Blessings 9 May Dandenong

Weeping Oil Statue of Mary Endeavour Hills





Drawing Competition prize for kids may 14



AGM 18 July, Boxhill



AGM 18 July 2014, Boxhill



Our Lady of Madhu, Priests 17 Aug, Boxhill



Our Lady of Madhu Procession 17 Aug, Boxhill




Velankanni Feast 7 Sep 2014 (by Tamil Fraternal Group)



Velankanni Feast 7 Sep 2014 (by Tamil Fraternal Group)



Foods Distribution Aug 2014



TCAV New Committee in their Monthly Meeting Sep 2104




## மில்க் பர்ஃபி



**தேவையானப் பொருட்கள் :**

- காய்ச்சிய பால் - 1 கப்
- சர்க்கரை இல்லாத கோவா - 250 கிராம்
- சர்க்கரை - ½ கப்
- பச்சை புட் கலர் - ¼டேபிள் ஸ்பூன்
- முந்திரிப்பருப்பு - 50 கிராம்

**செய்முறை :**

பால், சர்க்கரை, கோவா ஆகியவற்றை ஒரு பாத்திரத்தில் போட்டு சேர்த்து கலக்கி மிதமான தீயில் வைத்து, கலவை கெட்டியாகும் வரை கிளறவும்.

கலவை இறுகி வரும் சமயம் புட் கலரைச் சேர்க்கவும். பிறகு கலவை கெட்டியானவுடன் இறக்கி நெய் தடவிய தட்டில் ஊற்றி சமமாகப் பரப்பி நெய்யில் வறுத்த மந்திரிகளை அலங்கரித்து ஆறியவுடன் டைமண்ட் வடிவத்தில் வில்லைகள் போடவும். சுவையான மில்க் பர்ஃபி தயார் !

---

## வெண்டைக்காய் பக்கோடா

**தேவையானப் பொருட்கள் :**

- வெண்டைக்காய் - ¼ கிலோ
- புளி - தே.அளவு
- உப்பு - தே.அளவு
- கடலை மாவு - ½ கப்
- மிளகாய் பொடி - ½ ஸ்பூன்
- தனியா பொடி - 1 ஸ்பூன்
- சமையல் சோடா - தே.அளவு
- மஞ்சள்தூள் - ¼ ஸ்பூன்
- ரொட்டித்தூள் - ½ கப்
- அரிசி மாவு - ¼ கப்



**செய்முறை :**

வெண்டைக்காயின் காம்பு பாகத்தையும், தலைப்பாகத்தையும் வெட்டி எடுக்கவும். ஒரு கிண்ணத்தில் புளித் தண்ணிரோடு உப்பு, மஞ்சள்தூள் போட்ட சூடாக்கவும். பின் அதில் வெண்டைக்காயை போட்டு ஐந்து நிமிடம் கொதிக்க வைக்கவும். ஐந்து நிமிடம் கழித்து தண்ணீரை முழுவதும் வடித்து ஆற வைக்க வேண்டும். பின் கடலை மாவு, அரிசி மாவு, மிளகாய்ப் பொடி, தனியா பொடி, சமையல் சோடா, உப்பு போன்றவற்றுடன் தண்ணீர் சேர்த்து பஜ்ஜி மாவு போல கரைக்கவும். வெண்டைக்காயை இந்த மாவில் தோய்த்து பிரட் தூளில் புரட்டி எடுத்து எண்ணெயில் போட்டு பொரித்தெடுக்கவும். மொறுமொறுப்பான வெண்டைக்காய் பக்கோடா ரெடி!

# செபமாலையை எமது கரங்களில் ஏந்துவோம் !





(அக்டோபர் மாதம் அன்னை மரியாளின் புகழ் பரப்பும் செபமாலையின் மாதம்

Fr. அன்ரனி ஞானபிரகாசம், TCAV ஞானபிதா

“செபமாலை செபிக்கும்போது நமதாண்டவர் இயேசுவின் மகிழ்ச்சி - ஒளி - துக்கம் - மகிமை நிறைந்த பேருண்மைகளை தியானிப்பதன் வழியாக கிறிஸ்து நம் வாழ்வின் மையமாக மாறுகின்றார்.” - “செபமாலை செபிக்கும் ஒரு வீரர் படையை எனக்குக் கொடுங்கள் நான் உலகை வென்று காட்டுகிறேன்” என்கிறார் திருத்தந்தை 9ம் பத்திநாதர். மேலும், “செபமாலையின் மலர்கள் என்றும் அழுகிப் போகாது” என்கிறார் திருத்தந்தை 12ம் பத்திநாதர் - திருத்தந்தை இரண்டாவது அருள் சின்னப்பர் “கன்னி மரியாவுக்கு மிகவும் பிரியமான செபம் செபமாலை” என்கிறார். திருத்தந்தை 16ம் பெனடிக்ட் “மாலை நேரத்தில் செபமாலை செபிக்கும் குடும்பம் எவ்வளவு அழகானது” என்கிறார். “அன்னை மரியை தன் தாயாக ஏற்றுக் கொள்ளாத கிறிஸ்தவர் ஓர் அநாதைக்கு ஒப்பாவார்” என தனது 02 செப்டம்பர் 2014 திகதிய டுவிட்டர் செய்தியில் எமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

செபமாலை செபிக்கும்போது ஆண்டவர் இயேசுவின் மீட்பு வரலாற்றின் முக்கியமான பொருள் பொதிந்த தருணங்கள் மீண்டும் வாழ்ந்து காட்டப்படுகின்றன. கிறிஸ்துவின் வாழ்வு மற்றும் இறைபணியின் பல்வேறு நிலைகள் கண்டுபிடிக்கப்படுகின்றனவென இறையியல் வல்லுனர்கள் கருதுகின்றார்கள். அனுதினமும் செபமாலை செபிக்கும்போது அன்னை மரியாளோடு நம் இதயம் இயேசுவின் மறையுண்மைகளை நோக்கிப் பயிற்சி பெறுகின்றதென்று மரியன்னையின் கோடிக்கணக்கான பக்தர்கள் கருதுகின்றார்கள்.

சிறப்புமிக்க அக்டோபர் மாதத்தில் செபமாலை அன்னையின் திருவிழாவை திருத்தந்தை ஐந்தாம் பத்திநாதர் 1571ஆம் ஆண்டில் ஒரு வெற்றி விழாவாக உருவாக்கினார். அன்னை மரியாளின் மகிமையைப் பரப்பும் செபமாலையின் மாதமான அக்டோபர் மாதத்தில் விண்ணக மண்ணக தாயின் ஒரே ஆயுதமான செபமாலையின் மகிமையைப் போற்றுவோம். தரணியில் இறையருள் மலரட்டும் என்ற விசுவாச நோக்கத்தோடு நாமனைவரும் தனியாகவோ அல்லது குடும்பமாகவோ அல்லது குழுக்களாகவோ அனுதினமும் செபமாலை செபிப்பதற்கு முன்வருவோம். நமக்கு வரும் துன்பங்களை சகித்துக் கொண்டு வெற்றிக்கொள்ள ஒரே ஒரு வழி செபமாலை செபித்தலாகும். தினமும் செபமாலை செபித்து அதனைக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கும் போது செபமாலை வழியாக எமது விசுவாசத்தை அதிகரிக்கச் செய்து இறையருளை அள்ளித்தரும் சாதனமாகவும் அமைகிறது.

எமது மத்தியில் பலர் செபமாலையைக் கழுத்தில் தொங்கவிடுவதனை ஒரு பக்தி முயற்சி எனக்கருதாது நாகரீகச் செயலாக மாற்றுவது வேதனையானது. எம்மால் முடிந்த வரையில் அனுதினமும் செபமாலை சொல்வோம். எமது விண்ணக மண்ணகத் தாயின் மகிமையைப் போற்றுவோம். அன்னையே சரணம் என்று அக்டோபர் மாதத்தில் செபமாலை அன்னையை இல்லந்தோறும் போற்றிடும் செயல்களால் எமது மண்ணக வாழ்வை ஆதாயமாக்குவோம்.

நன்றி : TCNL.net

# RICH MAHAL

*The taste that lingers....*



## Restaurant & Asian Groceries

**RIch Mahal Vermont South**

Shop 3, 499, Burwood Highway,
Vermont South Shopping Centre
Vermont South 3133
Victoria, Australia
Phone : 03 9887 7663



**New Branch Detail**

**RIks Mahal Restaurant**

Shop 2/2 - 8 Victor crescent,
Narre Warren, VIC 3805
(03) 97059366

OPEN 7 DAYS 11.00 AM - 10.00 PM

**Hopper Night**
**Every Tuesday from 5 pm**

**Rich Mahal Asian Groceries**

Rice Dhall Milk Flour Sugar Spices
DVDs Cds Phone Cards Newspapers

Shop 4, 501, Burwood Highway, Vermont South Shopping Centre
Phone : 9887 7663 Fax : 9802 6658



visit us @www.richmaha.com.au



madha

மயில் இறகாய் மனம் வருடும்

நிகழ்ச்சிகள்











Tel / Fax 03 8712 1406

Mobile 0423 094 478

Hub Arcade,
28/15-23 Langhorne
St. Dandenonq VIC 3175

Email : pmoneytransfer@ymail.com



With Best Compliments to

**Tamil Community**

